OS 49/2021
வா.சா. 1 பாலமுருகன் த/பெ சுந்தரம்
நாள் 10.11.2025

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் பேக்டரியில் வேலை பார்க்கிறேன். எல்ஐசி-யில் ஏஜென்ட் ஆகவும் இருக்கிறேன். பிரதிவாதிகள் தவிர வேறு நபர்களிடம் கொடுக்கல் வாங்கல் இருக்கிறதா என்றால் உறவினர் என்பதால் பிரதிவாதியிடம் கொடுத்தேன். பணம் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் நான் கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து வைத்திருந்தேன். வருமான வரி கட்டுகிறேனா என்றால் எல்ஐசிக்காக கட்டுகிறேன். வருமான வரி கட்டுவது அதிகப்படியான வருமானம் இருந்தால் தான் கட்டுவார்கள் என்றால் அதுபோன்று இல்லை. 02.03.2005ம் தேதியில் வேணுகோபாலிடம் வெங்கடேசன் கடன் வாங்கிய நிலையில் பூர்த்தி ரசீது 29.01.2007ம் தேதி எனது அம்மாவிடம் எழுதி வாங்கியதற்கு காரணம் என்னவென்றால் எனது அம்மா அங்கே இருந்ததால் அவர் பெயரில் எழுதப்பட்டது. 3ம் பிரதிவாதி நிஷாந்தியின் திருமணத்திற்காக எவ்வளவு கொடுத்தீர்கள் என்றால் பணமான 2 லட்சம் கொடுத்தேன். ஏற்கனவே இருந்த அடமான கடன் மற்றும் புரோ நோட்டு கடன் ஆகியவற்றை சேர்த்து மொத்தமாக ரூ.4லட்சத்திற்கு கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது. முன்பணமாக ரூ.3,60,000/- சேர்ந்துவிட்டது.

2. கிரையம் செய்து கொள்ள கால அவகாசம் எந்த தேதியில் இருந்து என்றால் 13.06.2012லிருந்து 35 மாதம் மற்றும் மேலும் 3 வருடம் ஆகும். வெங்கடேசன் எந்த தேதியில் இறந்தார் என்று தெரியுமா என்றால் தேதி தெரியாது 2013ம் ஆண்டு இறந்துவிட்டார். கிரைய ஒப்பந்தம் போடப்பட்ட சொத்து யார் பெயரில் இருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தற்போதும் யார் பெயரில் இருக்கிறது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வெங்கடேசன் பெயரில் இருக்கும் சொத்து மட்டும் தெரியும். வெங்கடேசன் பெயரில் சொத்து இருப்பதற்கான ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. கிரைய ஒப்பந்தம் போடும் போது சொத்து அவர் பெயரில் இருந்தால் தான் ஒப்பந்தம் போட முடியும் என்றால் சரிதான். வெங்கடேசன் ரிஜிஸ்டர் ஆபிசில் சென்று கேட்டு தெரிந்து கொண்ட பிறகு தான் கிரைய ஒப்பந்தம் போட்டார். வா.சா.ஆ.15 ஆக 19.01.2015ல் ஒரு உடன்படிக்கை ஒப்பந்தம் பதிவு செய்யப்படாத ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான்.

3. அந்த ஒப்பந்தத்தில் அசல் மற்றும் வட்டி சேர்த்து ரூ.6,99,000/- என்றும் அதில் நான் பிரதிவாதிகளிடம் இருந்து ரூ.3,09,000/- பெற்றுக்கொண்டதாக எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த உடன்படிக்கை பத்திரத்தில் கிரைய ஒப்பந்தம் தவிர மற்ற ஆவணங்கள் அனைத்தையும் திருப்பி கொடுத்துவிட்டதாக விவரம் உள்ளது என்றால் சரிதான். ஆனால் பாண்டுகளை நான் ஒப்படைக்கவில்லை. வேறு எந்த ஒப்பந்த பத்திரமும் பாண்டும் என்னிடம் இல்லை என்று வாசகம் உள்ளது என்றால் சரிதான். ஆனால் பாண்டுகள் என்னிடம் தான் இருக்கிறது என்று சாட்சி பதில் அளிக்கிறார். பிரதிவாதிகள் தட்டச்சு செய்து வந்தார்கள். 2018ம் ஆண்டில் பிரதிவாதிகள் ரூ.3,12,000/- என்னிடம் கொடுத்தார்கள் என்றால் இல்லை. நான் கொடுத்த பணத்திற்கு எவ்வளவு வட்டி போடப்பட்டது என்றால் நான் வட்டி சொல்லவில்லை பிரதிவாதிகளே போட்டுக்கொண்டார்கள்.

4. எனது நிரூபண வாக்குமூலத்தில் 13.06.2012 தேதியிட்ட கிரைய அக்ரிமெண்ட்டில் ரூ.3,90,000/-ற்கு வட்டியாக மாதம் ஒன்றுக்கு ரூ.100க்கு ரூ.2 வீதம் என்று விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதிகள் சொன்ன விவரத்தை நான் ஒப்புக்கொண்டேன். 13.06.2012தேதியிட்ட ஆவணம் காலவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் காலம் இருக்க வேண்டும் என்பதற்காக நானே பிரதிவாதிகளிடம் சென்று எழுதி வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பாக்கி தொகை முழுவதும் செலுத்திவிட்டார்கள் என்றாலும் வேறு நபர்களுக்கு விற்பனை செய்ய இருப்பதாக தவறாக சொல்லியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.